
January 2020

# Coastal Watch

கடலோரப் பார்வை



## Coastal Ecosystem Matters

Coastal Watch
Monthly Coastal update from ICT
Vol. I Issue 7 January 2020

Welcome to Coastal Watch!

Every Month, Coastal watch carries the stories of coastal life styles. Coastal community shares their own life experiences. It is released as part of the DHAN Foundation - Earth Journalism Network Project- Internews project titled "Voice of Vulnerable". This is the seventh issue of the magazine "Coastal Watch".

The articles in this magazine are not written by journalist or expert in the media field. The articles are written by community journalism volunteers trained by DHAN Foundation to write articles and promote community journalism in the coastal area.

This issue carries about seven articles. The articles in this issue talks about the biodiversity in Muthupettai mangroves, an experience of a coastal farmer about drastic changes in agriculture pattern, library in a coastal village and role of a charitable trust in children development in coastal context. This issue also carries articles on eucalyptus tree, chithirai festival and cashew nut tree.

Thanks in advance for your support!

Keep Read and Reflect....

Regards

Editorial Team

Coastal Watch

## உள்ளடக்கம்

1. முத்துப்பேட்டை சதுப்பு நிலக்காடுகளும் - பல்லுயிர்ப் பெருக்கமும் ஓர் கற்றல் கட்டுரை... 1

2. ஓர் விவசாயியின் ஆதங்கம் 3

3. எங்கள் ஊர் நூலகம் 5

4. எங்கள் ஊர் பூக்கள் - ஊரும் மலரும் 7

5. தொண்டு உள்ளம் 9

6. தைல மரம் - ஆர்.எஸ்.பதி மரம் - யூக்கலிப்டஸ் மரம்... 11

7. முத்திரை பதிக்கும் சித்திரைத் திருவிழா... 13

8. எங்கள் ஊர் முந்திரி... 15

**DHAN Foundation**
1A, Vaidyanathapuram East
Kennet Cross Road
Madurai 625 016. Tamil Nadu, INDIA
Tel.: +91 452 2302500; Fax: 2602247
Email: dhanfoundation@dhan.org

# முத்துப்பேட்டை சதுப்பு நிலக்காடுகளும் – பல்லுயிர்ப் பெருக்கமும் ஓர் கற்றல் கட்டுரை...

சந்தோஷ் குமார் *

திருவாரூர் மாவட்டத்தில் ஒரு முக்கியமான ஊராக முத்துப்பேட்டை உள்ளது. இந்த ஊர் திருத்துறைபூண்டிக்கும் பட்டுக்கோட்டைக்கும் இடையில் உள்ளது. இது வங்காள விரிகுடாவிற்கு மிக அருகிலும், காவிரி டெல்டாவின் தென்முனை பகுதியில் உள்ளது. முத்துப்பேட்டை மீன்பிடிப்பு தொழிலுக்கும், முத்து எடுக்கும் தொழிலுக்கும் மட்டுமல்லாமல் பலவித பறவைகள் வந்து செல்லும் இடமாகவும் காணப்படுகிறது.

இந்தியாவின் அலையாத்தி காடுகள் இருக்கும் இடங்களில் முத்துப்பேட்டை முதன்மையிடமாக உள்ளது. இக்காடுகள் முத்துப்பேட்டை சதுப்புநிலக்காடுகள் என்றும் பெருமையாக அழைக்கின்றனர். இக்காடுகள் பல்லுயிர் பெருக்கத்தின் ஆதாரமாக இருக்கின்றன.

கி.பி. 2001 ஆம் ஆண்டு வனத்துறையினரால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் மொத்தம் 4,482 சதுர கி.மீ. பரப்பளவில் சதுப்புநிலக் காடுகள் காணப்படுகிறது. இதில் தமிழ்நாட்டில் 29.5 சதுர கி.மீ. பரப்பளவில் சதுப்புநிலக்காடுகள் உள்ளன என்றும், அதில் 61 சதவிகிதம் முத்துப்பேட்டையில் உள்ளது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

முத்துப்பேட்டை அலையாத்திக்காடுகள் தமிழ்நாட்டில் காணப்படக்கூடிய மிகப்பெரிய அலையாத்திக்காடு ஆகும். மொத்தம் 11,88,591 ஹெக்டேர் பரப்பளவில் காணப்படக்கூடிய இக்காடுகள் திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ளது. வேதாரண்யம் சதுப்பு நிலக்காடுகளின் ஒரு பகுதியாக உள்ள முத்துப்பேட்டை அலையாத்திக்காடுகள் தெற்கு எல்லையாக பாக்ஜல சந்தியையும், வடக்கே களிமண் உப்பளத்தையும் கொண்டுள்ளன.

பல்லுயிர் வாழ்நிலை என்பது நிலம், கடல், பிற நீர்நிலைகள் உட்பட பூமியில் வாழும் பல்வகை உயிரினங்களை உள்ளடக்கியது ஆகும். மிகப்பெரிய பல்லுயிர் வாழ்நிலைகளைக் கொண்ட 17 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். உலகில் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் 2.4 சதவீதமும், நீர்ப்பரப்பில் 4 சதவிகிதமும் இந்தியாவில் உள்ளது. உலகில் பதிவு செய்யப்பட்ட உயிரினங்களில் 7 முதல் 8 சதவிகிதம் இந்தியாவில்தான் இருக்கின்றன.

அரிசி, பருப்பு, தானியங்கள், காய்கறிகள், பழங்கள், நார்தாவரங்கள் உள்ளிட்ட ஒன்றுடன் ஒன்று நெருக்கமான உறவு கொண்ட 375 வகை தாவரங்கள் தோன்றிய 8 நாடுகளில் இந்தியாவும்



* **சந்தோஷ் குமார்** , திட்ட நிர்வாகி, தானம் அறக்கட்டளை

ஒன்றாகும். மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், ஒட்டகங்கள், குதிரைகள், கோழியினங்கள் என 255 வகையான உயிரினங்கள் இந்தியாவில் தான் கண்டறியப்பட்டன. கலாச்சார பன்முகத்தன்மையின் வளமாக உள்ள இந்தியாவில் பழங்குடியின மக்களிடமுள்ள பாரம்பரிய அறிவிலும் அதிக வளத்துடன் காணப்படுகிறது.

முத்துப்பேட்டை சதுப்பு நிலக்காடுகளில் காணப்படுகின்ற பல்லுயிர் பெருக்கம் என்பது, தாவரங்கள், தாவர மிதவையுரிகள், விலங்கு மிதவையுரிகள், கடல் புல்கள், கடல் தாவரங்கள், மீன் வகைகள், ஊர்வன, பறவைகள் மற்றும் பாலூட்டிகளை உள்ளடக்கியது. இதில்,

- **தாவரங்கள்:** சதுப்புநிலத்திற்கே உரிய தாவரங்களும், அதனை சார்ந்த தாவரங்கள் என்று 61 வகையான தாவரங்கள் காணப்படுகின்றன.
- **தாவர மிதவையுரிகள்:** 58 வகைகள் உள்ளன.
- **விலங்கு மிதவையுரிகள்:** 43 வகைகள் உள்ளன.
- **கடல் புல்கள்:** கடல் புல்களாக 6 வகை சிற்றினங்கள் உள்ளன.
- **கடல் தாவரங்கள்:** 10 சிற்றினங்களை கொண்ட கடல் தாவரங்கள் உள்ளன.
- **மீன் வகைகள்:** இவற்றில் 73 மீன் வகைகளும், 112 பூச்சியினங்களும், 14 கிராஸ்டேசியன்களாகவும் உள்ளன.
- **ஊர்வன:** 10 வகைகளான ஊர்வன உள்ளன



- **பறவைகள்:** நீர்ப்பறவைகள் மற்றும் நிலப்பறவைகள் என மொத்தம் 160 வகைகளான பறவை வகைகள் உள்ளன.
- **பாலூட்டிகள்:** இங்கு 13 வகை பாலூட்டிகள் உள்ளன. குறிப்பாக ஓநாய், மரநாய், கீரி, பழம் தின்னி வெளவால்கள் மற்றும் காட்டு முயல் போன்றவற்றை உள்ளடக்கியது.
- முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகள் அமைந்துள்ள லகூன் என்ற காயல் பகுதிக்கு ஒவ்வொரு ஆண்டின் அக்டோபரிலிருந்து பிப்ரவரி வரை பல்வேறு நீர்பறவைகள் வந்து செல்கின்றன.

முத்துப்பேட்டை சதுப்பு நிலக்காடுகளை சுற்றியுள்ள 22 குக்கிராமங்களில் உள்ள மீனவர்கள் மழைக்காலங்களில் பள்ளம் நிறைந்த சதுப்புநிலப்பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடுகின்றனர். மற்ற காலங்களில் சதுப்புநிலக்காட்டை ஒட்டிய கடற்பகுதியில் மீன்பிடித் தொழில் செய்கின்றனர். ஆண்டு முழுவதும் மீன்பிடிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவே.

மீனவர்களால் ஒவ்வொரு வருடமும் 106.55 டன் அளவு மீன்வளம் பெறப்படுகிறது என்ற கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில் 67 சதவீதம் மீன்களும் 33 சதவீதம் இறால் மற்றும் நண்டு வகைகளாகும். மீனவர்கள் அடப்பு வலை, கொடுவா வலை போன்ற வலைகளை மீன்பிடிப்பதற்காக பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறாக முத்துப்பேட்டையில் உள்ள இக்காடுகள், பல்வேறு வகை நீர்வாழ் உயிரினங்களின் உற்பத்திக் களமாகவும், புயல் மற்றும் சூறாவளியிலிருந்து கடலோர கிராமங்களையும், கிராம மக்களையும் பாதுகாக்கும் அரணாகவும் விளங்குகின்றன. மேலும் கடலோர கிராமங்களில் ஏற்படும் மண் அரிமானத்தை பெருமளவில் தடுத்து நிறுத்துகின்றன. அதே நேரத்தில் மக்கள் தங்கள் தேவைகளுக்காக கடலோர சதுப்பு நிலக்காடுகளை அழித்து வருவதும் உண்மை, குறிப்பாக சதுப்பு நிலக்காடுகளை சுற்றி பெருகி வரும் இறால் பண்ணைகள் இதற்கு முக்கிய உதாரணமாகும்.

# ஓர் விவசாயியின் ஆதங்கம்

சுசிலா *

எங்கள் ஊரில் விவசாயம் முன்பு எப்படி இருந்தது என்றும், தற்போது எப்படி இருக்கிறது என்றும் தங்களுக்கு இந்தக் கட்டுரை வாயிலாக சொல்வது நாகப்பட்டினம் மாவட்டம் விழுந்தமாவடி கிராமத்தை சேர்ந்த ராமமூர்த்தி.

எங்கள் ஊரில் முன்பெல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் நிறைய ஆடு மாடுகள் வைத்து இருந்தோம். அதனால் எங்கள் வயல் நிலத்திற்கு தேவையான உரங்களை தேடி அலையாமல் இயற்கை உரமான மாட்டு சாணத்தையும், ஆட்டு சாணத்தையும் பயன்படுத்தினோம். மேலும் ஆடு மாடுகளை எங்கள் நிலங்களிலேயே பட்டி போட்டு அடைத்து விடுவோம். எங்கள் வயல் நிலங்களை சுற்றியும் மரம், செடி, கொடிகள் நிறைய அளவில் இருந்தன; அதன் இலை தழைகளையும் சருகுகளையும் நாங்கள் உரமாக பயன்படுத்தினோம்.

ஆனால், தற்போது கடையில் எந்த உரங்கள் விற்பனை செய்கிறார்களோ அந்த உரங்களை அது பற்றி ஒன்றும் தெரியாமல் நாங்கள் எங்கள் வயல்களில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இதனால் எங்கள் வயல் நிலங்களில் மண் தரம் சீர்கெட்டு வருவதையும் அந்த மண்ணில் விளையும் பயிர்களின் விளைச்சலும் தரமும் குறைந்து கொண்டே இருக்கிறதை எங்களால் காண இயலுகிறது.

ஒரு காலத்தில் சுமார் 15-20 வருடங்களுக்கு முன் நாங்கள் எங்கள் வயல்களில் தண்ணீரை இறைக்க எவ்வித கஷ்டமும் படமாட்டோம், காரணம் எங்கள் ஊரில் அந்த அளவிற்கு மழை பொழிவு இருந்தது. இருப்பினும் மழைகள் பொய்த்து விட்டாலும் தண்ணீர் வற்றினாலும் குளங்களில் இருக்கும் தண்ணீரை இரு குடங்கள் வைத்து இறைத்து வந்தோம். மேலும் அவ்வாறு இறைக்கும் தண்ணீரில் குளத்தின்

* சந்தோஷ் குமார், தாமரைப்புலம்

ச ரு கு க ளு ம்
மீன் முதலிய உயிரினங்களின் கழிவுகளும் சிறந்த உரமாக பயிர்களுக்கு உபயோகமாக இருந்தது.

இந்த காலங்களில் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு ஆழ்துளை கிணற்றின் மூலமாகவே தண்ணீர் எடுத்து வருகின்றனர் இதனால் தண்ணீர் பாய்ச்சுவதன் மூலம் இயற்கை ஊட்டச்சத்துக்களை பயிர்களுக்கு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் ஒரு சாகுபடி செய்தாலே எவ்வளவு விளைச்சல் மற்றும் லாபம் வருமென்று கணக்கீடு செய்ய முடிந்தது ஆனால் இப்போது எங்கள் விளைநிலங்களில் பயிர்கள் விளையுமா! விளையாதா! என்றே தெரியாமல் இருக்கும் சூழல் நிலவுகிறது.

இப்படியாக வயல் நிலங்களை விளைச்சலுக்கு தயார் செய்வது முதல் அறுவடை வரை எல்லா நிகழ்வுகளும் இயந்திரமயமாக்கப்பட்டதாக இருக்கிறது. இதனால் விளைச்சலும் குறைந்து, மக்களுக்கு உடல் உழைப்பு குறைந்து நோய்களும் அதிகரித்த வண்ணம் இருக்கிறது.

மேலும் விளைச்சலுக்கு தேவையான விதைகளை எங்கள் நிலத்தில் இருந்து பயிர்செய்து எடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் இந்நிலையில் தற்போது கடையில் இருந்து வாங்கும் சூழல் உருவாகியுள்ளது. இதன் மூலம் விதையின் தரமும் குறைந்து இருக்கிறது விளைச்சல் அமோகமாக இல்லை.

தற்போது பூச்சித் தாக்குதல்களும் எல்லாப் பயிர்களிலும் அதிகமாகவே காணப்படுகிறது. என்னிடம் கேட்டால் இயற்கை விவசாயம் தான் உகந்தது என்று சொல்வேன். மீண்டும் நாம் இயற்கை விவசாய முறைக்குநமதுஅடுத்ததலைமுறையினருக்கு மிகவும் ஆரோக்கியமான உணவையும் செழிப்பான விவசாயத்தையும் கொடுக்க முடியும் என்பது என் நம்பிக்கை.

# எங்கள் ஊர் நூலகம்

அரிபிரியா *

என் பெயர் அரிபிரியா. எனக்கு நாகப்பட்டிணம் மாவட்டம் வேட்டைக்காரனிருப்பு தான் சொந்த ஊர். தமிழ்நாட்டில் ஒரு ஊராட்சிக்கு ஒரு நூலகம் என்ற விகிதத்தில் அரசாங்கம் கிராம ஊராட்சிகளில் நூலகங்களை நிறுவியுள்ளது. அவ்வாறு நிறுவப்பட்ட நூலகங்கள்; அதிக அளவில் மக்கள் பயன்பாட்டிற்கு வருவதற்காக மக்கள் அனைவரும் வந்து செல்லக்கூடிய பொதுவான இடங்களில் அமையப் பெற்றிருக்க வேண்டும் என்பது முதன்மையான கருத்து. அதைப்போல் எங்கள் ஊரில் நூலகமானது ஊராட்சி மன்ற அலுவலகத்தின் அருகில் அமையப் பெற்றிருக்கிறது. மேலும் அந்த இடத்தில் ஊராட்சிக்கு சொந்தமான கடைகளும் வணிக வளாகங்களும்; அதிக அளவில் உள்ளதால் நூலகத்திற்கு அதிக மக்கள் படிக்க வந்து சென்று பயனடைகின்றனர். எங்கள் ஊர் நூலகத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பினரும் படிக்கும் வண்ணம் பலதரப்பட்ட புத்தகங்களும் இதழ்களும் இருக்கின்றன. தினந்தோறும் உலக அளவில் மற்றும் தேசிய அளவில் நடக்கும் நடப்பு நிகழ்வுகளை தெரிந்து கொள்ள பலதரப்பட்ட செய்தித்தாள்களும், நாளிதழ்களும், வார இதழ்களும், மாத இதழ்களும் எங்கள் நூலகத்தில் படிப்பதற்கு இருக்கிறது. இவ்வாறு கிடைக்கப்பெறும் நூல்களையும் இதழ்களையும் எங்கள் ஊர் மக்கள் சிறப்பாக பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர். எங்கள் ஊர் நூலகம் ஞாயிற்றுக்கிழமை தவிர வாரத்திற்கு 6 நாட்கள் செயல்படுகிறது. காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரையிலும் மதிய இடைவேளைக்கு பின்னர் மீண்டும் மதியம் 2 மணி முதல் மாலை 4 மணி வரையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எங்கள் ஊர் நூலகத்தில் இருந்து நாங்கள் படிப்பதற்காக வீட்டிற்கு புத்தகங்களை எடுத்துச் செல்ல நேரிட்டால், முதலில் ரூ. 20 கொடுத்து உறுப்பினராக இணைந்து உறுப்பினர் அட்டை வாங்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு வழங்கப்பட்ட உறுப்பினர் அட்டையை கொண்டு ஒரு நபர் இரண்டு புத்தகங்களை தங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். இவ்வாறு எடுத்துச் சென்ற புத்தகங்களை ஒரு வாரத்திற்குள் திரும்ப நூலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். எடுத்துச் சென்று புத்தகங்களை படித்து முடிக்க முடியவில்லை என்றாலும் ஒரு



* அரிபிரியா , வேட்டைக்காரனிருப்பு



வாரத்திற்குள் புத்தகங்களை கொண்டுவந்து நூலகரிடம் ஒப்படைத்து மீண்டும் படிப்பதற்காக வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். எடுத்துச் சென்ற புத்தகங்களை திருப்பித் தருவதற்கு ஒரு வாரம் கெடு முடிந்திருந்தால் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் நூலகத்தில் புத்தகத்தை ஒப்படைக்கும் நாள்வரை பணம் செலுத்த வேண்டும்.

எங்கள் ஊரு நூலகத்திற்கு வாரம் ஒரு முறை, வார இதழ்களும், மாத இதழ்களும் தவறாமல் வருகின்றன. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை, பொதுவான புதிய நூல்கள் எங்கள் நூலகத்திற்கு வருகின்றன. அனைத்து வார, மாத மற்றும் பிற புத்தகங்களிலும் நூலகர் வரிசை எண் இட்டு சீல் வைத்து அதற்குரிய அலமாரியில் வைப்பார். அதன் பிறகே, வாசகர்கள் புத்தகங்களை எடுத்துச் செல்ல இயலும்.

அரசு தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவ, மாணவிகளுக்கு, எங்கள் ஊர் நூலகத்தில் உள்ள புத்தகங்கள் மிகவும் பயனுள்ளதாய் உள்ளன. பள்ளி குழந்தைகளுக்கும் எங்கள் நூலக புத்தகங்கள் பெரிதும் உதவுகின்றன. குறிப்பாக பள்ளி மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது, கிராம நூலக புத்தகங்களையே பயன்படுத்துகின்றனர்.

இன்றளவும், கிராம நூலகங்கள் அறிவை பெருக்கும் ஊடகங்களாக உள்ளன. ஒரு புத்தகம் படிப்பது 4 நண்பர்களுடன் கலந்து பேசி தெளிவு பெறுவதற்கு சமம் என்ற கூற்றும், நம்பிக்கையும் உண்மையே. இத்தகைய நூலகமானது எங்கள் ஊரிலும் இருப்பது, எங்களுக்கு மிகவும் பெருமைக்குரியதாக இருக்கிறது.

இன்றைய அலைபேசி உலகில், இன்றளவும், கிராம ஊராட்சி நூலகங்கள் ஓர் அறிவு பாசறைகளாக திகழ்கின்றன. அதனை பயன்படுத்தி, அறிவையும், அனுபவத்தையும் பெருக்கிக் கொள்வோம்.





# எங்கள் ஊர் பூக்கள் – ஊரும் மலரும்

அரிபிரியா *

பூக்கள் என்று சொன்னாலே பிடிக்காத பெண்கள் எவருமில்லை. பூக்கள் வளராத மண்ணும் இல்லை, தலையில் பூக்கள் வைக்காத பெண்ணும் இல்லை. எங்கள் ஊர் மண்ணிற்கு ஏற்ற பூக்களைப் பற்றி நான் உங்களுக்கு இந்த கட்டுரை வாயிலாக சொல்ல விரும்புகிறேன்.

அதாவது ஒவ்வொரு மண்ணிற்கும் கால நிலைக்கும் ஏற்றவாறு பூச்செடிகள் வளரும். எல்லா ஊர்களிலும் எல்லா பூக்களும் எளிதில் வளர்ந்து விட முடியாது. ஒவ்வொரு ஊரிலும் அதன் மண் வகை பொருத்தும் தட்பவெப்பநிலை மற்றும் காலநிலைக்கு ஏற்றவாறு பூக்கள் பூக்கும்.

எங்க ஊர் மண்ணுக்கு ஏற்றார்போல் கனகாம்பரம், செவ்வந்தி ,செம்பருத்தி, மல்லிகை, அலரி போன்ற பூச்செடிகள் அதிகளவில் இருக்கின்றன. அலரிப்பூவை பெண்கள் தலையில் சூடவில்லை என்றாலும் சாமிக்கு மாலையாக கட்டி போடக்கூடிய பூக்களில் மிக முக்கியமான ஒன்று ஆகும்.

எங்கள் பகுதிகளில் செவ்வந்திப் பூக்கள் மாலையாக கட்டி விற்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் விற்பனைக்காகவே எங்கள் பகுதிகளில் அதிக அளவில் விளைவிக்க படுகின்ற பூக்களில் இதுவும் ஒன்று. செம்பருத்தி பூச்செடிகளின் இலைகளை பறித்து அரைத்து தலையில் தேய்த்து குளித்தால் உடல் வெப்பத்தை தணிப்பதோடு தலைமுடியை நன்கு வளர செய்யும். தினந்தோறும் ஒரு செம்பருத்தி பூவை சாப்பிட்டு வந்தால் இதயத்திற்கு நல்லது, மேலும் இந்தப் பூக்கள் ரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது.

* அரிபிரியா , வேட்டைக்காரனிருப்பு





தமிழகமெங்கும் பொதுவாக விற்பனை செய்யக்கூடிய பூக்களில் கனகாம்பரமும் ஒன்று. கனகாம்பரம் பூக்களின் விலையும் சற்று அதிக அளவில் இருக்கும். பெண்கள் அதிகமாக விரும்பும் மலர்களில் கனகாம்பரமும் ஒன்று. இது மனமற்ற மலராக இருந்தாலும் இந்த மலரை வேண்டாம் என்று சொல்லாத பெண்மனம் ஒன்றுகூட இல்லை.

பெண்களின் மனதிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கக்கூடிய மலர்களில் ஒன்று மல்லிகை. எங்கள் ஊர் நன்றாக விளையும் மலர்களில் மல்லிகை முதன்மையானது. மேலும் மல்லிகைப்பூவிற்கு நல்ல விலை கிடைக்கும் என்பதால் எங்கள் பகுதிகளில் அதிக அளவில் மல்லிகை பூக்கள் சாகுபடி செய்து வருகின்றனர்.

நான் மேலே குறிப்பிட்ட பூக்களுடன் சிலவிதமான அழகிய செடிகளும் எங்கள் ஊர் பகுதிகளில் ஆங்காங்கே வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆங்கில மாத காலண்டரில் டிசம்பர் என்ற மாதம் பற்றி அனைவரும் தெரிந்து வைத்திருப்போம். அதேபோல் எங்கள் பகுதிகளில் டிசம்பர் பூக்கள் என்று ஒரு வகை மலர் இருக்கிறது இது டிசம்பர் மாதத்தில் மட்டும் தான் பூக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது. அதனாலேயே அதற்கு டிசம்பர் பூ என்று பெயரிடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இதேபோல் ரோஜா பூக்களும் எங்கள் மண்ணில் ஓரளவிற்கு வளரும் பூவாக இருந்து வருகிறது.

இவ்வாறாக எங்களுடைய பகுதிகளில் பூக்களும் அதன் முக்கியத்துவமும் இருந்து வருகிறது. மனித வாழ்விலும் பிறப்பு முதல் இறப்பு வரை பூக்கள் முக்கியமான பங்கு ஆற்றி வருகின்றன.




# தொண்டு உள்ளம்

வடிவேலு *

உலகம் முழுவதும் தொண்டு உள்ளங்களும், தொண்டு நிறுவனங்களும் பல உள்ளன, இந்தியாவில் மட்டும் இலட்சத்திற்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் உள்ளன. நான், எங்கள் ஊரில் செயல்படும் ஒரு தொண்டு நிறுவனம் பற்றி இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

எனது பெயர் வடிவேலு. நான் நாகபட்டினம் மாவட்டத்தில் நாலுவேதபதி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கடந்த 10 வருடங்களாக எங்கள் ஊரில் ஒரு தொண்டு நிறுவனத்தில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் இளங்கலை ஆங்கிலம் முடித்துவிட்டு, இளங்கலை கல்வியியல் (பி.எட்.) படித்துள்ளேன். படித்து முடித்து விட்டு, இங்கு பணியில் சேருவதற்கு முன்னர், எங்கள் கிராம பள்ளியில் தற்காலிகமாக பணி செய்து வந்தேன். பள்ளி நேரத்திற்கு பின், எங்கள் கிராமத்திலேயே மாலை நேர கல்வி எடுத்து வந்தேன். அப்பொழுது, தொண்டு நிறுவனத்திலிருந்து பணியில் சேர எனக்கு அழைப்பு வந்தது. நானும், எனது கல்வியை கொண்டு என்னால் முடிந்த உதவியை பிறருக்கு செய்ய ஓர் வாய்ப்பாக கருதி, தொண்டு நிறுவனம் நடத்தும் ஆதரவற்ற மாணவர் இல்லத்தில் உயிர்ப்பூட்டுபவர் (Animator) மற்றும் பயிற்றுநராகவும் பணியில் சேர்ந்தேன்.

பொதுவாக, நாம் எல்லோருக்கும் தொண்டு நிறுவனம் என்றால், பேரிடர் மற்றும் அவசர காலங்களில் வந்து உதவி செய்து செல்லும் ஓர் அமைப்பாக கருதும் எண்ணமே உள்ளது. ஆனால் எங்களது தொண்டு நிறுவனம் போன்று, வருடம் முழுவதும் தாங்கள் எடுத்துக் கொள்ளும் பணியை செய்யும் நிறுவனங்கள் இந்தியாவில் மிகக் குறைவாகவே உள்ளன.

எங்களது நிறுவனம், வருடம் முழுவதும், ஆதரவற்ற குழந்தைகளுக்கு, உறைவிடம், உணவு, உடைகள் தருவதுடன் மாலை நேர கல்வியுடன் ஊக்கத்தையும் தருகிறது.

இந்நிறுவனம், சுனாமி பேரிடருக்கு பிறகு கடந்த 15 வருடங்களாக எங்களது பகுதியில் ஆதரவற்ற குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவி செய்து வருகின்றது.

* **வடிவேலு**, நாலுவேதபதி

ஒவ்வொரு ஆதரவற்ற குழந்தைகளையும், உள்ளூர் தமிழ்நாடு, அண்டை மாநிலம் மற்றும் வெளிநாட்டினரும் தத்தெடுத்து உதவி செய்ய வழிவகை செய்கிறது. பள்ளி செல்லும் ஆதவரற்ற குழந்தைகளுக்கு தேவையான உடை, புத்தக பை, புத்தகங்கள் மற்றும் தேவையானவற்றை தருவதோடு, மாத மாதம் குழந்தைகளை தத்தெடுத்தவர்களின் உதவியுடன் ஊக்கத் தொகையாக ரூ. 5,000 முதல் ரூ. 8,000 வரை பெற்றுத் தருகின்றனர்.

குறிப்பாக குழந்தைகளை தத்தெடுத்தவர்களுக்கு குழந்தைகளின் பிறந்தநாள் பற்றி விபரத்தை ஒரு வாரத்திற்கு முன்பாகவே தெரியப்படுத்துகிறோம். அவர்களும் குழந்தைகளுக்கு தேவையான புதிய உடைகள் மற்றும் பரிசு பொருட்களை குழந்தைகளின் பெயரில் அனுப்பி வைப்பார்கள். குழந்தைகளின் பிறந்தநாள் கொண்டாட்ட புகைப்படங்களை உரிய தத்தெடுத்த நபர்களுக்கு நன்றி கடிதத்துடன் அனுப்பிவைக்கிறோம். அவர்களும் அதனை கண்டு மகிழ்ந்து எங்களது நிறுவனத்திற்கு நன்றி சொல்லி கடிதம் அனுப்பி வருகிறார்கள்.

நான் எங்களது நிறுவனத்தின் ஆதரவற்ற குழந்தைகளின் இல்லத்தில் தினசரி மாலை நேர வகுப்பு நடத்துவதுடன், ஓர் நூலகத்தையும் நிறுவி செயல்படுத்தி குழந்தைகளின் கல்வி தரம் மற்றும் அறிவு மேம்பட பணி செய்து வருகிறேன்.

எங்களது நிறுவனம், குறிப்பிட்ட கால இடைவெளியில் கிராம அளவில் கூட்டங்கள் நடத்தி மக்களுக்கு குழந்தைகளின் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மேலும், பேரிடர் கால முன்னறிவிப்பு வரும் சமயம், கிராமங்களில் விழிப்புணர்வு கூட்டங்களை ஒருங்கிணைப்பதுடன், பேரிடருக்கு பிறகு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான உதவியை செய்து வருகிறது.

எங்களது நிறுவனம் ஆதரவற்ற ஏழை குழந்தைகள் கல்லூரி மற்றும் உயர்கல்வி பயிலவும் வழிகாட்டுதல் மற்றும் நிதி உதவியும் செய்து வருகின்றது.

சுனாமி பேரிடருக்கு பிறகு பல தொண்டு நிறுவனங்கள் எங்கள் பகுதிக்கு வந்து சென்றன. ஆனால், வெகுசில தொண்டு நிறுவனங்களே நிலையாக எங்கள் பகுதியில் இருந்து பணி செய்து வருகின்றன. அத்தகைய நிறுவனங்களில் எங்களது பெட்ராக் தொண்டு நிறுவனமும் ஒன்று, அத்தகைய தொண்டு நிறுவனத்தில் பணிபுரிவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

# தைல மரம் – ஆர்.எஸ்.பதி மரம் – யூக்கலிப்டஸ் மரம்...

துர்காதேவி *

நாகப்பட்டினம் மாவட்டம் விழுந்தமாவடி அருகே உள்ள புதுப்பள்ளி தான் எங்கள் ஊர். எங்கள் ஊரில் பல மரங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் இந்த ஆர்.எஸ்.பதி மரம். எங்கள் கிராமத்தில் மிக உயரமாக வளரக்கூடிய மரம் இது. இந்த மரமானது சித்த வைத்தியத்தில் பயன்படுத்துவதாக கூறப்படுகிறது. இதன் இலைகளிலிருந்து ஆர்.எஸ்.பதி என்கிற தைலம் தயாரிக்கப்படுவதால் இதற்கு எங்கள் ஊரில் ஆர்.எஸ்.பதி மரம் என்றே பெயரிடப்பட்டு விட்டது. இந்த மரம் வீடு கட்டுவதற்கும், எரி பொருளாகவும் பெரும்பான்மையினரால் பயன்படுத்தப்படுகிறது. இது விலை உயர்ந்த மரமும் கூட. ஆதலால், இம்மரத்தை டன் கணக்கில் வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்வதும் வழக்கம்.

மற்ற மரங்களை ஒப்பிடும்போது இது சற்றே வேறுபட்டு காணப்படுகிறது. மற்ற மரங்களை வெட்டிய பிறகு வெட்டிய தண்டுப் பகுதியிலிருந்து துளிர்க்க ஆரம்பிக்கும், துளிர் வந்தாலும் வளர்ச்சி குறைவாகவே இருக்கும். ஆனால் இந்த மரத்தில் மட்டும் குறைந்த காலத்திலேயே நிறைய துளிர்கள் இருக்கும். அவ்வாறு வளர்ந்த புதிய துளிர்கள் மீண்டும் நன்கு வளர்ந்து ஒவ்வொரு துளிரிலும் தாய் மரம் போல் பயன்தரும்.




இந்த மரங்களின் வேர் மிக ஆழமாக பூமிக்குள் சென்று வளரும் என்பதாலும், மேலும் இந்த மரங்கள் நிறைய தண்ணீரை உறிஞ்சும் தன்மை கொண்டதாலும், இந்த மரங்களின் அருகே வேறு மரங்கள் வளராது எனக் கூறப்படுகிறது. ஆதலால் இந்த மரங்களை தனியாக வைத்துதான் வளர்க்க வேண்டும் என அறிவுரை வழங்குகின்றனர்.

இந்த மரங்களின் விதைகளை எடுத்து நாம் மீண்டும் கன்றுகளை உற்பத்தி செய்து கொள்ளலாம். இதன் விதைகள் காற்றில் பறந்து எங்கு விழுந்தாலும் முளைக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது. மற்ற மரங்களுக்கு நாம் குறிப்பிட்ட

* துர்காதேவி, புதுப்பள்ளி

இடைவெளிகளில் தண்ணீர் பாய்ச்ச நேரிடும். ஆனால் இந்த ஆர்.எஸ்.பதி மரங்களை பொறுத்தவரையில், கன்று வைத்து சற்று துளிர் வரும் வரை தண்ணீர் ஊற்றினால் போதுமானதாக இருக்கிறது. பிறகு இம்மரங்கள் தானாகவே நன்கு உயரமாக வளரக்கூடிய ஆற்றலுடைய மரங்களாக காணப்படுகிறது. இந்த மரத்தின் அனைத்து பகுதிகளும் பயன் தரக்கூடியதாக அமைந்திருக்கிறது. இம்மரத்தின் இலைகள் ஆர்.எஸ்.பதி தைலம் தயாரிக்க பயன்படுகிறது. இந்தத் தைலம் மனிதர்களுக்கு நல்ல வலி நிவாரணியாக இருப்பதுடன் கை, கால் வீக்கம், வெட்டுக்காயம் போன்ற உபாதைகளை குணப்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் முதியோர் வரை சளி, இருமல் போன்ற உபாதைகளுக்கும் இந்தத் தைலத்தை பயன்படுத்தலாம். உடனே குணமாகும் தன்மைகளை கொண்டதாக இருக்கிறது.

மேலும் இம்மரங்களின் பட்டையை அரைத்து வாசனை திரவியங்கள் தயாரித்து பயன்படுத்தலாம். இதன் இலைகளை பறித்து தண்ணீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து குளித்தால் உடல் வலி, சுரம் ஆகிய பிணிகள் சரியாகி விடும். இதன் பறித்த இலைகளை ஒரு மண் சட்டியில் வைத்து எரிக்கும் போது உண்டாகும் புகை எங்கள் ஊரில் உள்ள பெரும்பாலான வீடுகளில் இயற்கை கொசு விரட்டியாக பயன்படுத்தப்படுகிறது.

இந்த மரங்களை வெட்டி மர வியாபாரிகள் சுற்றுவட்டார ஊர்களில் இருக்கும் உணவகங்களின் எரிவாயு பயன்பாட்டிற்காகவும் வெளியூர்களுக்கு ஏற்றுமதியும் செய்து வருகின்றனர்.

எங்கள் ஊரைச் சுற்றி இருக்கும் இம்மரங்கள் எங்கள் ஊரில் இருக்கும் சில மக்களுக்கு வாழ்வாதாரத்தை தேடித் தருவதாக அமைந்திருக்கிறது. இம்மரங்களின் மூலம் வரும் வருவாயை வைத்து தங்கள் குடும்பத்தையும் குழந்தைகளையும் வளர்த்து வருகின்றனர்.



# முத்திரை பதிக்கும் சித்திரைத் திருவிழா...

இராஜவேல் *

இப்படித்தான் எங்கள் ஊரில் சித்திரை திருவிழாவின் போது மைக்கில் அழைப்பார்கள். நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டம் விழுந்து எழுந்த மாவடு என்று அழைக்கப்பட்டு காலப்போக்கில் விழுந்தமாவடி என்று பெயர் மாற்றம் பெற்றது எங்கள் ஊர். எங்கள் கிராமத்தில் வேண்டுவோருக்கு வேண்டிய வரங்களை தந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ மழை முத்து மாரியம்மன் ஆலயத்தில் சித்திரை மாதத்தில் நடைபெறும் முத்திரை பதிக்கும் சித்திரை திருவிழாவினை பற்றிய கட்டுரை இது.

எங்கள் ஊரின் முத்து மாரியம்மன் கோவிலில் சித்திரை முதல் நாள் தீமிதி திருவிழா நடைபெறும். அதனை முன்னிட்டு பங்குனி மாதம் 15ஆம் தேதி தீயில் இறங்கும் பக்தர்கள் மாலையணிந்து காப்பு கட்டி விரதம் இருப்பார்கள். தீமிதி திருவிழா நடைபெறுவதற்கு மூன்று நாட்கள் புராண கதைகள் பாடுவர். சித்திரை முதல் நாள் அன்று காலை முதல் அம்மனுக்கு சிறப்பு வழிபாடும் மாவிளக்கு போடும் நிகழ்ச்சியும் அதனைத்தொடர்ந்து தீமிதி திருவிழாவும் நடைபெறும். தீமிதி திருவிழா முடிந்து திருக்கோவில் வளாகத்தில் அன்னதானம் நடைபெறும்.

அன்னதானத்தை தொடர்ந்து பால் காவடி, பாடை காவடி, ரத காவடி, கும்மி, கோலாட்டம் போன்ற தமிழ் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். மேலும் தமிழரின் பாரம்பரிய விளையாட்டான உரியடி, இளவட்டக் கல் தூக்குதல், வழுக்கு மரம் ஏறுதல் போன்ற போட்டிகளும் நடைபெறும்.

ஊரில் உள்ள சிறுவர் சிறுமியர் அனைவரும் கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம் போன்ற

* **இராஜவேல்**, விழுந்தமாவடி





தமிழ் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு தங்கள் திறமைகளை வெளிக்கொணர்வர். மேலும் எங்கள் ஊரில் வசிக்கும் அனைத்து சமுதாய மக்களிடையே நிலவும் ஒற்றுமையை குறிக்கும் வண்ணமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் உபயம் அளித்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும்.

திருவிழாவின்போது அந்த 10 நாட்களுமே கண்ணை கவரும் வண்ணம் வண்ணமயமான வானவேடிக்கை நிகழ்ச்சியும் பூமாலை அலங்காரத்துடன் உபயதாரர்கள் அம்மனை வீதி உலாவாக ஆலயத்தை சுற்றி கொண்டு வருவார்கள். அம்மனைப் பின்தொடர்ந்து ரதகாவடி நிகழ்ச்சியும் நடைபெறும். வீதி உலா நிறைவடைந்த பிறகு புராண கதை, நாடகம், நாட்டுப்புற தெம்மாங்கு பாடல்கள், ஆடல் பாடல் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

கடைசி நாள் அம்மனுக்கு மஞ்சள் தண்ணீர் விளையாட்டு நிகழ்ச்சியும் அக்னி கொப்பரை வீதி உலா காட்சியுடன் எங்கள் ஊர் சித்திரை திருவிழா இனிதே நிறைவடையும்.

எங்கள் ஊர் சித்திரைத் திருவிழா என்றாலே விவசாயிகள் அனைவரும் தங்கள் அறுவடையை முடித்து திருவிழாவை எதிர்பார்த்த வண்ணம் இருப்பார்கள். வெளிநாடுகளிலும் வெளியூர்களிலும் வேலைக்காக சென்ற அனைவரும் தத்தம் சொந்த ஊரான விழுந்தமாவடிக்கு திரும்பி விடுவார்கள். மேலும் திருவிழா முடியும் வரை மீனவர்கள் யாரும் கடலுக்குள் செல்ல மாட்டார்கள். திருவிழாவின்போது அந்தப் பத்து நாட்களிலும் இரவு முழுவதும் கோவில் வளாகத்தில் திருவிழாவை கொண்டாட வந்து விடுவார்கள். சில நேரங்களில் வெளியூர்களில் வேலை செய்யும் உறவினர்களும் கூட சித்திரை மாதத்தில் எங்கள் ஊர் அம்மன் திருவிழாவை பார்க்க வந்து விடுவார்கள்.

எங்கள் ஊரில் சித்திரை திருவிழா நடைபெறும்போது எந்த ஒரு சிறு அசம்பாவிதங்களும் பிரச்சனைகளும் களங்கமும் இல்லாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டு எங்கள் ஊர் இளைஞர்கள் ஒற்றுமையாக ஊர் திருவிழாவை நடத்துவர். எங்கள் ஊர் சித்திரைத் திருவிழா என்றாலே சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து அனைவரும் கண்டு ரசித்து அம்மன் அருள் பெற்று வீடு திரும்புவர். அந்தப் பத்து நாட்களுமே மக்கள் வெள்ளத்தில் மழை முத்து மாரியம்மன் கோவில் வளாகம் நிரம்பியிருக்கும் இதைக் காண கண் கோடி வேண்டும்.



# எங்கள் ஊர் முந்திரி...

அரிபிரியா *



என் பெயர் அரிபிரியா. எங்கள் ஊரானது வேட்டைக்காரனிருப்பு, இது நாகப்பட்டினம் மாவட்டத்தில் விழுந்தமாவடி கிராமத்தின் அருகே இருக்கும் ஓர் கிராமம். எங்கள் பகுதியில் சிறப்புமிக்க மரங்களில் முந்திரியும் ஒன்று.

''எங்க ஊரு முந்திரி ருசி கண்டவள் எட்டு கப்பலை விற்று முந்திரி கொட்டை வாங்கி சாப்பிட்டாளாம் அப்பவும் பத்தலையாம் என்ற பழமொழியே எங்கள் ஊர் பக்கம் உண்டு. எங்கள் ஊர் முந்திரியின் பெருமையை அந்த அளவிற்கு சிறப்பித்து கூறியுள்ளனர். முந்திரி பழமும் முந்திரி பருப்பும் சாப்பிடாதவர்கள் என்று ஒருவரும் இருக்க முடியாது. முந்திரி மரம் ஒரு வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே காய்ப்பு கொடுக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது. முந்திரி மர வளர்ப்பிற்கு மற்ற மரங்கள் போல் அதிக செலவுகள் இருக்காது. குறைந்த செலவில் அதிக லாபம் கொடுக்கக்கூடிய மரங்களுள் முதன்மையானது முந்திரி மரம். முந்திரி மரங்களை கன்றுகளாகவோ அல்லது அதன் விதைகளை பதியம் போட்டோ உற்பத்தி செய்யலாம். சின்னஞ்சிறு முந்திரி கன்றுகள் நன்கு வளர்ந்து மரமாகும் வரை நீர் பாய்ச்சினால் போதுமானது ஆகும். அதற்குப் பின் முந்திரியும் மரங்களுக்கு என்று எந்த ஒரு செலவும் கிடையாது.

இவ்வாறான முந்திரி மரங்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மண் வகைகளிலும் வளரக் கூடியதாக தென்படுகிறது. ஆனால் எங்கள் ஊர் மண்ணில் விளையும் முந்திரிக்கு சிறப்பு ருசியும், அந்தஸ்தும் உண்டு.

எங்கள் ஊரில் முந்திரி மரங்கள் வளர்ந்து பெரிய காடாக மாறும் சூழல் இங்கு இருக்கிறது. ஏனெனில் அந்த அளவிற்கு விரைவாக படரும் தன்மை கொண்ட மரங்களாக இவை காணப்படுகிறது. இம்மரங்களானது முதலில் பூ வைத்து பிறகு காயாகி பழம் பழுத்து முழுமையான முந்திரிக்கொட்டை உருவாகுவதற்கு சுமார் மூன்று

* அரிபிரியா , வேட்டைக்காரனிருப்பு



மாதங்கள் ஆகும்.

இதன் பூவிலிருந்து முதலில் சிறிய காயும் அதன் கொட்டையும் உருவாகி பெரிய முந்திரிக்காய் ஆகுவதற்கு இடையில் உள்ள அதன் வளர்ச்சி காலத்தை கன்னிக்காய் என்று எங்கள் பகுதிகளில் அழைக்கப்படுகிறது. இவ்வாறு கிடைக்கும் கன்னிக்காய்களை விரும்பாதவர்கள் என்று யாரும் இல்லை. முந்திரிப்பருப்பு எந்த அளவிற்கு சுவையானதாக இருக்கிறதோ அதே அளவிற்கு முந்திரி கன்னி காய்களின் பருப்பும் சுவையானதாகவே இருக்கும். கன்னி காய்களின் பழுப்பு வெள்ளை நிறம் கொண்டதாக இருக்கும் இதை சாம்பார் முதலிய குழம்புகளில் கலந்து எங்கள் பகுதியில் சமைக்கப்படும். மேலும் முந்திரி கன்னிக்காய் பழங்கள் மிகவும் சுவையாக உள்ள காரணத்தினால் எங்கள் ஊரில் அனைவரும் அதனை விரும்பி சாப்பிட்டு மகிழ்வர்.

இதுதவிர முதிர்ந்த முந்திரி காய்களையும் முந்திரி கன்னி காய்களையும், எங்கள் சுற்றுவட்டார ஊர்களில் விற்பனைக்கு எடுத்துச் செல்வார்கள்.



முந்திரி பழங்கள் நன்கு பழுத்தவுடன் தானாகவே மரத்திலிருந்து விழும் இயல்பு கொண்டது, அப்பொழுது தான் அந்தப் பழங்களை எடுத்து அதன் கொட்டைகளை திருகி எடுப்பர். இவ்வாறு கிடைக்கப்பெறும் முந்திரி கொட்டைகள் நல்ல தரமாகவும் நல்ல சுவையாகவும் இருக்கும். மேலும் இவ்வாறு கிடைத்த முந்திரிக் கொட்டைகளை நெருப்பில் சுட்டு வெண்ணீரில் அவித்தும் அதன் முந்திரிப் பருப்பை எடுத்து விற்பனை செய்து வருகின்றனர். மற்ற பழங்களில் பருப்பை விட முந்திரிப் பருப்பின் விலை சற்று உயர்வாக காணப்படும். மேலும் எங்கள் பகுதியில் இருந்து கிடைக்கும் முந்திரிப்பருப்பை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறோம். முந்திரி பருப்புகளை பெரும்பாலான இனிப்பு வகைகளில் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வளவு பெருமை மிக்க முந்திரி தோட்டங்கள் எங்கள் பகுதிகளில் பரவலாக காணப்படுகிறது.

சில சமயங்களில் சிலரின் வேலைப்பாடு சற்று முந்திரிக்கொட்டை தனமாக இருக்கிறது என்று பரவலாக பேசப்படுகிறது காரணம் முந்திரியில் மட்டுமே பழம் நன்கு வளர்ச்சி அடைவதற்கு முன்பே முந்திரிக் கொட்டை உருவாகிவிடும். அதுபோல அவர்களின் செயல்கள் சற்றும் எந்த ஒரு பின்விளைவுகளையும் யூகிக்காமல் செய்வதையே குறிப்பதாக அமைகிறது.

இறுதியாக எங்கள் ஊரு முந்திரி கொட்டைகளை சுவைத்தவர்கள் யாரும் இதனை திரும்ப கேட்காமலும், இன்னொரு முறை வேண்டாம் என்று கூறாமலும் இருக்க மாட்டார்கள்.



## தானம் அறக்கட்டளை

தானம் அறக்கட்டளை வறுமையை அகற்ற மக்கள் இயக்கங்களை உருவாக்கி, அவற்றை ஜனநாயக அடிப்படையில் செயல்பட வைக்கும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1997 அக்டோபர் 2 முதல் செயலாற்றி வருகிறது. ஆர்வமுள்ள படித்த இளைஞர்களை ஏழை மக்களின் வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படச் செய்வதே தானம் அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாகும்.

மக்கள் நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் ஏழ்மையை அகற்றும் நோக்கில் களஞ்சியம், வயலகம், மானாவாரி விவசாயம், தகவலகம், கடற்புற வாழ்வாதாரம், பஞ்சாயத்து போன்ற அமைப்புகளின் வாயிலாக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்துவருகிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடன் இணைந்து 14 மாநிலங்களில் 17 இலட்சம் மக்களுடன் மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

## DHAN Foundation

DHAN Foundation is a development Organization working towards significant changes in the lives of the poor through innovative themes. It has been promoted with the objective of bringing highly motivated and educated young women and men to the development sector to work with the poor at grassroots. DHAN Foundation has come out with two scalable models Kalanjiam model of Micro Finance and Vayalagam model of Tank based watershed development. It is working on developing models on other programmes viz Tata Dhan Academy, Rainfed, Panchayat, ICT for poor. The new themes on Climate Change and Adaptation, Migration and Development, Youth and Development are on piloting in evolving models. The centres of DHAN Foundation play a vital role in integrating different programmes and themes across, in nurturing and processing the culture of collegiality, mutuality and solidarity.


மேலும் தொடர்புக்கு

**தானம் அறக்கட்டளை**

1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்குத் தெரு

மதுரை 625 016. தமிழ்நாடு

தொலைபேசி: +91 452 2302500, தொலைநகல்: +91 452 2602247

மின்னஞ்சல்: dhanfoundation@dhan.org, இணையதளம்: www.dhan.org